செ.வெ.எண். 01/ஜூன் தேதி : 01.06.2016

# பத்திரிக்கை செய்தி

## தருமபுரி மாவட்ட பேரிடர் மேலாண்மை முகமைக் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர்திரு.கே.விவேகானந்தன்.இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது :-

எந்த ஒரு பேரிடர் நிகழ்வின்போதும் தேவையான ஒரு நிறுவன அமைப்பை ஏற்படுத்தி அதன்மூலம் பேரிடர் மேலாண்மைத் திட்டங்களை வகுப்பது அதனை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணித்து அரசாங்கத்தின் பல்வேறு பிரிவுகள் மூலம் பேரிடர்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பது, பேரிடர் தாக்கத்தின் விளைவுகளைத் தணிப்பது, ஒருங்கிணைந்த உடனடி மீட்புப் பணிகளை மேற்கொள்வது போன்றவற்றிற்காக மைய அரசால் வகுக்கப்பட்ட "பேரிடர் மேலாண்மைச் சட்டம் 2005"-ன் பிரிவு 25(1) மற்றும் (2)-ன்கீழ் மாவட்ட பேரிடர் மேலாண்மை முகமை மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்ட விபரம் தெரிவிக்கப்பட்டு, தருமபுரி மாவட்டத்தில் பேரிடர் ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகள் குறித்து கண்டறியவும், எந்தவொரு பேரிடர் நிகழ்வுகள் ஏற்படினும் அதனை எதிர்கொள்ள மாவட்ட நிர்வாகம் போதுமான கட்டமைப்புகளை கொண்டு செயல்பட ஏதுவாக தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து துறைக்கான பேரிடர் மேலாண்மை திட்டங்களை தயாரிக்கவும் வட்ட பேரிடர் மேலாண்மை மற்றும் மாவட்ட பேரிடர் மேலாண்மை 2016க்கான திட்டங்களை மேம்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டது. மாவட்ட அவசரகால செயல்பாட்டு மையமானது கட்டணமில்லா தொலைபேசி எண்கள் 1077, 1800 425 7016, 1800 425 1071, (whatsapp) கைபேசி எண் 8903891077 மற்றும் மின்னஞ்சல் முகவரி deoc.dpi@gmail.com ஆகியவற்றைக் கொண்டு 24x7 மணிநேரமும் இயங்கி வரும் விபரம் தெரிவிக்கப்பட்டது. மேலும் காலங்களில் காவல்துறை மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களிலும், நோய் தடுப்புக்கென சுகாதாரத்துறை துணை இயக்குநர் அலுவலகத்திலும், கால்நடைகளுக்கான கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்புக்கென கால்நடைத்துறை இணை இயக்குநர் அலுவலகத்திலும், காட்டுத்தீ ஏற்பட வாய்ப்புள்ள காலங்களில் வன மற்றும் தீயணைப்புத்துறை அலுவலகங்களிலும் அத்துறைகளுக்கான கட்டுப்பாட்டு அறைகள் இயங்கிவரும் விபரமும் தெரிவிக்கப்பட்டது. மேலும் எதிர்வரும் தென்மேற்கு பருவமழையை எதிர்கொள்ள பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 04/06/2016 அன்று கிராம சபா ஒன்று நடத்தவும் அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்,திரு.ப.கங்காதர், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.சங்கர் இணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.ஜானகி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் திரு.ஸ்ரீதர், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்(பொது) திருமதி மாலதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.